முழுப் பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை – 2023 (2024)

51 - சித்திரம்

புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்திற்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக் கொள்ளப்படும் கருத்துக்களுக்கேற்ப இதில் உள்ள சில விடயங்கள் மாற்றப்படலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

සියලු ම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், Department of Examinations, Sri Lanka

අධ්‍යාපන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

චිත්‍ර කලාව I சித்திரக்கலை I Art I	**51 T I**

පැය තුනයි மூன்று மணித்தியாலம் *Three hours*	අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள் Additional Reading Time - 10 minutes

විභාග අංකය : .....

විභාගයට පෙනී සිටි ආකාරය පිළිබඳව සලකුණු කරන්න.

නිමි	නිමි නැත	අසනීප
முடிந்தது	முடியவில்லை	சுகயீனம்
Completed	Not completed	Ill

විනාඅවත්තරත්තෙ වාසිත්තු, විනාක්කළෙත් තෙරිවුසෙය්වතර්කුම් විටෙ එළුතුම්පෝතු මුන්නුරිමෙ වළංකුම් විනාක්කළෙ ඔළුංකමෙත්තුක් කොළ්වතර්කුම් මේලතික වාසිප්පු නේරත්තෙප් පයන්පටුත්තුක.

சுட்டெண் : .....

அறிவுறுத்தல்கள்:

* இவ்வினாத்தாள் **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது.

பகுதி I

- **எல்லா** வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடையளிக்குக.
- ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை** எதிரே உள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

பகுதி II

- **மூன்று** உப பகுதிகளைக் கொண்டது.
- **'அ'** பகுதியிலிருந்து எவையேனும் **இரண்டு** வினாக்களையும் **'ஆ', 'இ'** ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **ஒரு** வினா வீதமும் தெரிவுசெய்து **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

* பகுதி **I**, பகுதி **III** ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கையளிக்குக.

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

வினாத்தாள் I

பகுதி	புள்ளி
I	
II	
மொத்தம்	
1 ஆம் பரீட்சகர்	2 ஆம் பரீட்சகர்

பகுதி I

● **1** தொடக்கம் **5** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையைத்** தெரிவுசெய்க.

1. அநுராதபுர பிசோ மாளிகையிலுள்ள சந்திர வட்டக்கல்லையும் பொலன்னறுவை வட்ட தாகையிலுள்ள சந்திரவட்டக்கல்லையும் கவனத்திற் கொள்ளும்போது மாதிரியை அடிப்படையாகக் கொண்டு காணக்கூடிய வேறுபாடு

(1) அரை வட்ட வடிவத்தை மீறிச் சென்றமையாகும்.
(2) விலங்குகளின் ஒழுங்கு முறையில் ஏற்பட்ட மாற்றங்களாகும்.
(3) விலங்கு உருவங்களை வேறுபட்ட நிரல்களில் அமைத்தமையாகும்.
(4) நடுவில் உள்ள தாமரை வடிவத்தில் ஏற்பட்ட மாற்றமாகும்.
(5) ஒடுங்கிய நிரல்களுக்குப் பதிலாக அகன்ற நிரல்களைப் பயன்படுத்தி செதுக்கியமையாகும். (.....)

2. வெட்டம்பு கல் குகையில் "இரண்டு தந்தங்களுடனான யானை உருவம்" வரையப்பட்டிருப்பது,

(1) சாம்பல், மஞ்சள் நிற வர்ணப் பூச்சுகளினாலாகும்.
(2) வெள்ளை, சாம்பல் நிற வர்ணக் கலவையினாலாகும்.
(3) கேத்திர கணித வடிவங்களைப் பயன்படுத்தியாகும்.
(4) சிவப்பு நிறம் சார்ந்த மஞ்சள் (கபில) நிறப் பூச்சுகளினாலாகும்.
(5) இரேகைகளுக்கு முன்னுரிமை அளித்து நிறந்தீட்டலாகும். (.....)

3. பார்வதி பெண் தெய்வ சிலை நிரமாணிப்பின்போது கலைஞன் முயன்றிருப்பது

(1) உலோக வார்ப்பு நுட்பக்கலையைப் பயன்படுத்தி தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்துவதற்காகும்.
(2) தெய்வீகத் தன்மையைக் காட்டுவதற்குப் பொருத்தமான அணிகலன்கள், ஆபரணங்கள் மற்றும் நளின மெய்ந்நிலைகளை வெளிப்படுத்துவதற்காகும்.
(3) முப்பரிமாண மெய்ந்நிலையில் பெண்களின் நளினத்தையும் சமநிலையையும் காட்டுவதற்காகும்.
(4) வலது கையில் கடக முத்திரையையும் இடது கையில் யானைத்தந்த முத்திரையையும் காட்டுவதற்காகும்.
(5) உடலோடு ஒட்டிய ஆடையுடன் பெண்ணின் உடல் அழகை எடுத்துக் காட்டுவதற்காகும். (.....)

4. இராஜா ரவிவர்மாவின் ஓவியங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கும் கட்புல மொழியாக விமர்சகர்கள் முன்வைப்பது
(1) ஆங்கில இந்திய மரபாகும்.
(2) இந்திய மற்றும் கீழைத்தேய கலைப் பாணியாகும்.
(3) மனப்பதிவுவாத கலை மொழியின் பிரயோகமாகும்.
(4) இந்திய மறுமலர்ச்சி இயக்கத்தின் பண்பாகும்.
(5) இந்திய சுதேச கலை மரபின் செல்வாக்காகும். (.....)


5. ஜூலியஸ் சீசரின் மார்பளவு சிலையின் மூலம் வெளிப்படுத்தப்படுவது,
(1) வெண்பளிங்குக் கல்லை ஊடகமாகப் பயன்படுத்துவதில் உள்ள நுட்பத்திறமையாகும்.
(2) உரோம சிற்பக் கலையில் உள்ள யதார்த்தவாத நுட்பமுறையின் ஆழமாகும்.
(3) பேரரசர் ஒருவரிடமுள்ள வீர மற்றும் திடகாத்திரமான வெளிப்படுத்தலாகும்.
(4) பேரரசரின் உள்ளக சிக்கல் தன்மைகளை துல்லியமாக வெளிப்படுத்துவதாகும்.
(5) தசை, தோல் மற்றும் நரம்புகளை பொருத்தமாக இயற்கைத் தன்மையுடன் வெளிக்காட்டும் திறமையாகும். (.....)

● 6 தொடக்கம் 10 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருத்தமான விடையை, 1 தொடக்கம் 9 வரையில் இலக்கமிடப்பட்டுள்ள பின்வரும் ஓவியங்களிலிருந்து தெரிவுசெய்க.


1


2


3


4


5


6


7


8


9

6. சாஸ்திராலய யதார்த்தவாத (Academic Realism) கலைப் பண்புகளைப் பயன்படுத்திய ஓவியங்கள் எவை?
(1) 1,2,6 (2) 1,2,8 (3) 1,6,7 (4) 1,6,8 (5) 1,7,8 (.....)


7. நிலையான பொருள் ஒழுங்கமைப்பின்போது காணப்படும் கலைப் பண்புகள் கலந்த ஓவியம் எது?
(1) 2 (2) 4 (3) 5 (4) 7 (5) 8 (.....)

8. கனவுருவவாத கலைப் பிரயோகம் காணப்படும் ஓவியங்கள் எவை?
(1) 2, 3 (2) 2, 4 (3) 3, 5 (4) 3, 7 (5) 4, 9 (.....)

9. ஒழுங்கமைப்பின்போது கொலாஜ் நுட்பத்துடன் கலப்பு ஊடகத்தைப் பயன்படுத்திய ஓவியம் எது?
(1) 2 (2) 3 (3) 4 (4) 7 (5) 9 (.....)

10. நவீனவாதக் கலையின் யதார்த்தபூர்வமான நிலை, இயற்கைத் தன்மை என்பவற்றை விகாரப்படுத்திக் காட்டும் ஆக்கங்கள் எவை?
(1) 2, 3 (2) 3, 5 (3) 4, 5 (4) 6, 7 (5) 7, 9 (.....)

● **11** தொடக்கம் **15** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருத்தமான விடையை **A, B, C, D, E** எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் ஓவியங்களிலிருந்து தெரிவுசெய்க.



A B C D E

11. **A** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள நடனமாது ஓவியத்திலுள்ள ஆன்மீக வெளிப்பாட்டை அழுத்தமாக்கிக் காட்டுவதற்குக் கலைஞன் முயன்றிருப்பது,
(1) அரைவாசி மூடிய கண்களில் சோக மற்றும் யோசனைமிக்க தன்மைகளை வெளிப்படுத்தியமை மூலமாகும்.
(2) பின்புறம் திரும்பியிருக்கும் முகத்திற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் இருண்டநிற வர்ணங்களின் மூலமாகும்.
(3) ஆழமான யோசனை மிக்க மெய்ந்நிலையைப் போன்று உயிர்ப்பற்ற இரு கண்களினாலும் ஆகும்.
(4) நடனமொன்றிற்குத் தயாராகும் சந்தர்ப்பமொன்றில் புற உடலங்கங்களை ஒன்று சேர்ப்பதன் மூலமாகும்.
(5) உடலுக்குப் பிரகாசமான வர்ணங்களைப் போன்றே பின்னணிக்கு கலப்பு வர்ணங்களைப் பயன்படுத்தியதன் மூலமாகும். (.....)


12. **B** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள அம்ரிதா சேர்ஜிலின் "மூன்று சிறுமிகள்" ஓவியத்தில் குறியீடுகளை வெளிக்காட்டுவதற்குக் கலைஞன் முயன்றிருப்பது
(1) சுவரில் காணப்படும் கடும் நிற நிழல்கள் மூலமாகும்.
(2) மங்கலான கடும் மஞ்சள் நிறப் பின்னணியைப் பயன்படுத்தியதன் மூலமாகும்.
(3) செயலற்ற நிலையில் காணப்படும் பெண் உருவங்களின் ஒருங்கிணைப்பின் மூலமாகும்.
(4) பிரகாசமான மற்றும் கடும் வர்ணங்களை ஒன்றுடன் ஒன்று கலந்ததன் மூலமாகும்.
(5) நிச்சயமற்ற உணர்வுகளின் தொகுப்பைக் கொண்ட பெண் உருவங்கள் மூலமாகும். (.....)

13. **C** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள வின்சன்ட் வங்கோவின் 'நட்சத்திரங்கள் நிறைந்த இரவு' ஓவியம்,
(1) இரவு நேர வெளிச்சத்தின் தன்மையை ஓவியமாக்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சியாகும்.
(2) உண்மைத் தன்மைக்கு அப்பாற் சென்று பாவங்களின் யதார்த்தத்தைக் காட்டுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சியாகும்.
(3) அடிப்படை வர்ணங்களை தளத்தின் மீது முறையற்ற விதத்தில் பூசுவதன் ஊடாக வரையப்பட்ட வெளிப்படுத்தலாகும்.
(4) வேகமான தூரிகைப் பயன்பாட்டின் மூலம் கருப்பொருளின் யதார்த்தத்தை வெளிப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சியாகும்.
(5) இருள் மற்றும் ஒளியை சமமான வகையில் பயன்படுத்தி வரையப்பட்ட வெளிப்படுத்தலாகும். (.....)

14. **D** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள எட்கா டெகாவின் தலை சீவும் பெண்ணின் ஓவியத்தின் மூலம் கலைஞன் கவனம் செலுத்தி இருப்பது,
(1) பிற்பட்ட மனப்பதிவுவாத கலைப் பண்புகளை வெளிப்படுத்துவதற்காகும்.
(2) அந்தரங்க அடையாளங்களை மறைத்து செயற்பாட்டைக் கவனிப்பதற்காகும்.
(3) வேகமானதும் சுதந்திரமானதுமான வர்ணந் தீட்டும் பாணியை வெளிப்படுத்துவதற்காகும்.
(4) உடல் அமைப்பு மற்றும் உடலங்கங்கள் ஒளியில் காட்டும் பிரதிபலிப்பை அவதானிப்பதற்காகும்.
(5) தனிமையான மற்றும் பல்வேறு மனநிலைகளை அடிப்படையாகக் கொண்ட பாவத்தை வெளிப்படுத்துவதற்காகும். (.....)

15. **E** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஐவன் பிரீஸின் 'திரும்பி வருதல்' ஓவியமாக்கலுக்குக் கையாளப்பட்டிருக்கும் கலைத்துவ செல்வாக்கு
(1) மொன்றியன் மற்றும் எல் கிறேகோவின் உருவங்கள் சார்ந்த செல்வாக்காகும்.
(2) பிக்காசோ மற்றும் கோகேனின் அரூப வடிவங்களின் செல்வாக்காகும்.
(3) சல்வடோர் டாலி மற்றும் எல் கிறேகோவின் வடிவங்களின் பயன்பாடாகும்.
(4) சல்வடோர் டாலி மற்றும் பிக்காசோவின் கனவடிவவாத வடிவங்களின் செல்வாக்காகும்.
(5) மொன்றியன் மற்றும் கோகேனின் ஓவியங்களில் வெளிப்படுத்தப்பட்ட தளத்தை மாதிரியாகக் கொண்ட செல்வாக்காகும். (.....)

● **16** தொடக்கம் **20** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருத்தமான விடையை பின்வரும் **F, G, H, I, J** எனப் பெயரிடப்பட்டுள்ள செதுக்கல்களைக் கொண்ட பின்வரும் படங்களிலிருந்து தெரிவுசெய்க.



F G H I J

16. **F** செதுக்கலிலுள்ள உன்னதமான எளிமையான மற்றும் நீளமான வடிவங்களின் காரணமாக இது
(1) கபில முனிவரை சித்திரிப்பது எனக் கூறப்படுகிறது.
(2) இராணுவ வீரனை சித்திரிப்பது எனக் கருதப்படுகிறது.
(3) மழைக்கதிபதி வருணனின் தெய்வீக எண்ணக்கருவை வெளிப்படுத்துகிறது.
(4) பல்லவ கலை மரபின் செல்வாக்கிற்குட்பட்ட நிருமாணமாகும்.
(5) குப்த கலைச் செல்வாக்குடனான நிருமாணமாகும். (.....)


17. **G** செதுக்கலிலுள்ள கட்டடக் கலையின் மரத்திலான நிருமாணமான இது
(1) மலர்ந்த தாமரை வடிவத்திற்கமைய செதுக்கப்பட்டதாகும்.
(2) தூணின் உச்சியில் நான்கு திசைக்கும் பரந்து காணப்படும் கலை அம்சமாகும்.
(3) தூண்மீது பால்க்கையை தாங்குவதற்கு அமைக்கப்பட்ட அம்சமாகும்.
(4) நான்கு இதழ்களும் கீழ்நோக்கி அமைந்த தாமரைப் பூவின் அலங்காரத்தையுடைய அம்சமாகும்.
(5) மரக் கட்டடக் கலையில் காணக்கூடிய பேகட நிர்மாணமாகும். (.....)

18. **H** எழுத்தினால் காட்டப்படும் பலகை செதுக்கல் வேலைப்பாடு
(1) ஜாதகக் கதையொன்றை சித்தரிக்கும் செதுக்கலாகும்.
(2) பிராணியொன்றை போதிசத்துவராக சித்தரிக்கும் படைப்பாகும்.
(3) போதிசத்துவரை சித்தரிக்கும் சந்தர்ப்பமாகும்.
(4) தொடர் கதை ஊடகத்தைப் பயன்படுத்திய அரைப் புடைப்பு செதுக்கலாகும்.
(5) குறை புடைப்பு பலகைச் செதுக்கலைப் பயன்படுத்தி ஜாதகக் கதை செய்தியொன்றை முன்வைத்தலாகும். (.....)

19. **I** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஆகாயக் கங்கை இறக்கம், செதுக்கல் வேலைப்பாட்டின் நுட்பமுறை மற்றும் கலைத்துவத்தின்படி
(1) கதைகூறும் தன்மை, இயற்கைவாத கலைப்பாணி மற்றும் சித்தரிப்புடனான வெளிப்பாடாகும்.
(2) தென் இந்தியக் கலையின் தனித்துவமான செதுக்கல் பண்புகளுடனான சித்தரிப்பாகும்.
(3) மனித, விலங்கு மற்றும் கற்பனை உருவங்களுடனான கூட்டு ஒழுங்கமைப்பாகும்.
(4) பல்லவ கலைப் பண்புகளுடன் கூடிய மூன்று பகுதிகளை உடைய அரைப் புடைப்பு கற் செதுக்கலாகும்.
(5) முழு ஒழுங்கமைப்பையும் கலைத்துவமான பாணி மற்றும் கதை கூறும் வடிவில் காட்டுவதாகும். (.....)

20. **J** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள தூண் செதுக்கலானது
(1) உரோமப் பேரரசரின் டேசியான் யுத்தக் காட்சியைக் கொண்டதாகும்.
(2) டைடஸ் பேரரசரின் யுத்த வெற்றியை கருப்பொருளாகக் கொண்ட நிர்மாணமாகும்.
(3) டிரஜன் பேரரசரின் டேசியான் யுத்த சந்தர்ப்பத்தைச் சித்தரிக்கும் சந்தர்ப்பமாகும்.
(4) யுத்த வெற்றிச் சந்தர்ப்பமொன்றைச் சித்தரிக்கும் உரோம கட்டிடக்கலை அங்கமாகும்.
(5) டெமிதியன் பேரரசனால் டைடஸ் பேரரசனின் யுத்த வெற்றியைக் கொண்டாடுவதற்கு அமைக்கப்பட்ட நிர்மாணிப்பாகும். (.....)

● **21** தொடக்கம் **25** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருத்தமான விடையை, **K, L, M, N, O** எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் கலைப் படைப்புக்களிலிருந்து தெரிவுசெய்க.



K L M N O

21. **K** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள திஸ்ஸ ரணசிங்காவின் 'கடினமான செயல்' சிலையின் எண்ணக்கரு சார்ந்த கருப்பொருள் மிகவும் அழுத்தமாக வெளிப்படுத்தப்படுவது

(1) கரடுமுரடான மேற்பரப்பிலிருந்து கிடைக்கப்பெறும் இருள் மற்றும் ஒளியின் மூலமாகும்.
(2) வார்ப்பிற்காக வெண்கலத்தைப் பயன்படுத்தியுள்ளதாலாகும்.
(3) மாதிரியில் இயற்கைத் தன்மையைத் தவிர்த்திருப்பதனாலாகும்.
(4) உடலுறுப்புகள் மிக உன்னதமாகக் காட்டப்பட்டிருப்பதனாலாகும்.
(5) ஐரோப்பிய நவீனவாத சிற்பக் கலையின் நடைமுறையைப் பயன்படுத்தியிருப்பதனாலாகும். (.....)

22. **L** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிவன் சோமஸ்கந்தர் சிலையின் மூலம் குறித்துக்காட்டப்படுவது,

(1) சிவன் மற்றும் பார்வதி தேவியின் திருமணக் காட்சியாகும்.
(2) ஆண் பெண் சக்திகளின் ஒன்றிணைவாகும்.
(3) சிவபெருமானின் சக்தி பராக்கிரமமாகும்.
(4) சிவன் மற்றும் பார்வதியின் தெய்வீகக் காதலாகும்.
(5) பார்வதி தேவி சிவனின் மனைவி என்பதாகும். (.....)

23. **M** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள கலைப் படைப்பில் தாய்மையை உணர்த்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட கட்புல உபாயங்கள் மிகவும் மேலோங்குவது

(1) பெண்ணொருவரின் தோற்றத்தை ஆரம்ப மட்டத்தில் சித்தரிக்கும் டெரகோட்டா சிலை மூலமாகும்.
(2) பெண்ணின் பண்புகளை வெளிப்படுத்தும் அணிகலன்கள், ஆடைகள் மூலமாகும்.
(3) அகன்ற இடையையும் புடைத்த மார்பகங்களையும் அழகாக சித்தரிப்பதாலாகும்.
(4) மலர் மற்றும் இலைகளால் அலங்கரிக்கப்பட்ட தலை அணிகளுடனான பெண்ணின் உருவம் என்பதனாலாகும்.
(5) கழுத்து, கைகள், பாதங்கள், இடை என்பவற்றை அலங்கரிக்கும் ஆபரணங்களை சித்திரிப்பதாலாகும். (.....)

24. **N** எழுத்தினால் காட்டப்படும் சிலையின் மூலம் புலப்படுவது,

(1) காந்தார அரச வம்சத்தவரின் சிலையாகும்.
(2) கனிஷ்க அரசரை வெளிக்காட்டும் காந்தார சிலையாகும்.
(3) கனிஷ்க அரசரை வெளிப்படுத்தும் மதுரா சிலையாகும்.
(4) காந்தாரர்களைச் சந்தித்த மனித முண்ட உருவமாகும்.
(5) மதுராவில் கண்டெடுக்கப்பட்ட வாள் மற்றும் செங்கோலையுடைய அரச வம்சத்தவனாகும். (.....)

25. **O** எழுத்தினால் காட்டப்படும் சமோதிராஸிலுள்ள 'வெற்றியின் தேவதை' சிலையில் காணக்கூடிய பண்பானது

(1) தொன்மையான யுகத்தின் முன்னுதாரணமாகும்.
(2) தொன்மையான யுகத்தின் பாவத்தைக் காட்டும் கருப்பொருளாகும்.
(3) ஹெலனிஸ்டிக் யுகத்தின் நளினமாகும்.
(4) கிரேக்க புராதன யுகத்தின் கொந்தபொஸ்கோ மாதிரியாகும்.
(5) ஹெலனிஸ்டிக் யுகத்தின் இயற்கைவாத செல்வாக்காகும். (.....)

● **26** தொடக்கம் **30** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையைத்** தெரிவுசெய்க.

26. சாஸ்திராலய யதார்த்தவாதத்தின் அடிப்படைப் பண்பானது,
(1) கருப்பொருள், ஒளி என்பவற்றுக்கிடையிலான தொடர்பை வெளிப்படுத்துவதாகும்.
(2) தூரதரிசனக் கோட்பாட்டை சரியாகப் பயன்படுத்தலாகும்.
(3) உன்னத அழகியல் சட்டதிட்டங்களுக்கு அமைவாக மனித உருவங்களைச் சித்தரிப்பதாகும்.
(4) யதார்த்த உலகில் காணப்படும் கருப்பொருளை, யதார்த்தமாக சித்தரிப்பதாகும்.
(5) அழகியல் சட்டதிட்டங்களையும் கோட்பாடுகளையும் பின்பற்றுவதாகும். (.....

27. அதியதார்த்தவாதத்திற்கான அடிப்படையாக உள்ளது
(1) சிக்மன்ட் புரொய்டின் உளப்பகுப்பாய்வு சித்தாந்தமாகும்.
(2) முதலாம் உலகப் போரினால் ஏற்பட்ட துன்பகரமான அனுபவங்களாகும்.
(3) உள்ளார்ந்த மனோபாவங்களில் உள்ள முக்கியத்துவத்தைப் பற்றிய நம்பிக்கையாகும்.
(4) தர்க்கரீதியல்லாத, உண்மையல்லாத, ஆத்ம வெளிப்பாடு போன்ற கருப்பொருள்களாகும்.
(5) மனது கலையம்சம் பொருந்திய உருவங்களைக் கட்டியெழுப்புவதற்கு முக்கியமானது என நம்பியமையாகும். (.....

28. வர்ணக் கலைப் படைப்பொன்றின் கருத்தமைவதில் பங்களிக்கும் சரியான மூன்று கோட்பாடுகளைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.
(1) ஒத்திசைவு, மேற்பரப்பு, வெளி
(2) மேற்பரப்பு, மாதிரி, ரிதம்
(3) விகிதாசாரம், முப்பரிமாண இயல்பு, வர்ணம்
(4) சமநிலை, ரிதம், தூரதரிசனம்
(5) வடிவம், கருப்பொருள், ஒருநிலைப்படுத்தல் (.....

29. முகலாய சித்திரக் கலையில் காணக்கிடைக்கும் விசேட பண்பு
(1) புவிக்காட்சி, வேட்டைக் காட்சி மற்றும் அரச குடும்பத்தின் காட்சியை வரைதலாகும்.
(2) சமய, வரலாற்றுக் கருப்பொருள்களை வரைதலாகும்.
(3) தூரதரிசனப் பண்புகள் மற்றும் நுண்ணிய இரேகைகளினால் காட்டப்படுதலாகும்.
(4) பர்சியர்கள் மற்றும் முகலாயர்களுக்கிடையிலான தொடர்பைக் காட்டுதலாகும்.
(5) முழு ஒழுங்கமைப்பையும் அலங்காரமாகக் கொள்வதாகும். (.....

30. பாரதத்தில் பாவங்களுடன் கூடிய புத்தர் சிலையை நிர்மாணித்த பெருமைக்கு உரியவர்கள்
(1) காந்தார கலைஞர்கள். (2) மதுரா கலைஞர்கள்.
(3) சாரநாத் குருகுலத்தினர். (4) குப்த மரபினர்.
(5) அமராவதி கலைஞர்கள். (.....

● **31** தொடக்கம் **35** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை** அதற்கு முன்னாலுள்ள கட்டடக்கலை நிர்மாணிப்புகளை அடிப்படையாகக் கொண்டு தெரிவுசெய்க.

31. இந்த அழகிய தாமரைத் தடாகம்,
(1) கல்லைக் கொண்டு வடிவமைக்கும் கலைஞனின் ஊடக பயன்பாட்டிலுள்ள சிறப்பினைக் காட்டும் நிர்மாணமாகும்.
(2) இயற்கை அழகுசார் எண்ணக்கரு, நிர்மாணத்திறன் என்பன ஒன்றிணைந்த சந்தர்ப்பமாகும்.
(3) தொழில்நுட்ப தத்துவத்தின் ஊடாக அழகியலை வெளிக்காட்டும் நிர்மாணிப்பாகும்.
(4) மகாபராக்கிரமபாகு மன்னனின் தொழில்நுட்ப அறிவை விவரித்துக் காட்டும் நிர்மாணிப்பாகும்.
(5) ஆலாஹன பிரிவெனாவில் வசித்த பிக்குகளுக்காக அமைக்கப்பட்டதாகும.



(.....

32. இங்கு காணப்படும் ஜன்தாகர,
(1) அரங்கலை ஆராமையில் வசித்த பிக்குகள் குளிப்பதற்காக அமைக்கப்பட்டதாகும்.
(2) அபயகிரி பிக்குமார்களுக்கு வெந்நீர் வழங்கியதொன்றாகும்.
(3) மகா விகாரை சுற்றாடலில் அமைந்துள்ள புத்த பூசைக்கு வெந்நீரைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டதொன்றாகும்.
(4) அடிப்பாகத்தில் கற்களைப் பதித்து மருந்து நீர் குளியலுக்கான மிகிந்தலையில் அமைக்கப்பட்டதொன்றாகும்.
(5) ரிட்டிகலயில் அமைக்கப்பட்ட வெந்நீர் குளிப்பிற்கான வசதிகளை உடையதொன்றாகும்.



(.....

33. பஞ்ச பாண்டவர் இரத கோயில்களிடையே அமைந்துள்ள 'திரௌபதி இரதம்'



(1) சதுர அறை வடிவில் அமைந்ததாகும்.
(2) இரதக் கோயில்களில் எளிமையானதும் சிறியதுமான கோயிலாகும்.
(3) தனித்துக் கட்டப்பட்டுள்ள கோயிலாகும்.
(4) பூர்த்தி செய்யப்படாத கோயிலாகும்.
(5) பரந்த செதுக்கல் வேலைப்பாடுகளுடன் கூடியதாகும்.

(.....)

34. சிந்து வெளியில் கண்டுபிடிக்கப்பட்ட குளிக்கும் தடாகத்திலுள்ள சிறப்பான கட்டிடக்கலை நிர்மாண அம்சமாவது,



(1) ஒன்றோடொன்று எதிர் முகமாக உள்ள படிக்கட்டுகள் ஆகும்.
(2) கேத்திர கணித வடிவிலான சிறிய பகுதிகளாகும்.
(3) நீரை வடிகட்டி அனுப்பக் கூடிய வடிகாலமைப்பாகும்.
(4) நீர் வழங்கலுக்கான வில் வளைவாகும்.
(5) பிரதான கதவையொட்டி அமைந்துள்ள சிறிய பகுதியாகும்.

(.....)

35. அபுசிம்பல் தேவாலயத்தின் நிர்மாணிப்பு விசேடத்துவம் பெறுவது,



(1) சூரிய தெய்வ எண்ணக்கருவிற்கு அமைவாக நிர்மாணிக்கப்பட்டுள்ளதாலாகும்.
(2) கேத்திர கணித வடிவங்களை அதிகமாகப் பயன்படுத்திய தேவாலயம் என்பதாலாகும்.
(3) கற்பாறையை உள்நோக்கிக் குடைந்து அமைக்கப்பட்ட தேவாலயமாதலால் ஆகும்.
(4) நவ இராசதானி யுகத்தில் நிர்மாணிக்கப்பட்ட பாரிய தேவாலயத் தொகுதி என்பதனாலாகும்.
(5) நைல் நதிக்கரையில் அமைந்துள்ள பாறையையொட்டி அமைக்கப்பட்டுள்ள தேவாலயமென்பதாலாகும்.

(.....)

● **36** தொடக்கம் **40** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை,** பின்வரும் ஓவியத்தைப் பயன்படுத்தித் தெரிவுசெய்க.



36. இந்த ஓவியத்தை மறுமலர்ச்சி யுகத்தில் நிர்மாணித்த கலைஞன்
(1) மைக்கல் ஏஞ்சலோ.
(2) சன்டிரோ பொட்டிசேலி.
(3) லியனோடோ டாவின்சி.
(4) ரபாயல் சான்சியோ.
(5) அன்ரிடியோ டேல் வெரோக்கியோ. (.....

37. இவ்வோவியம் காணப்படும் இடம்,
(1) உரோமிலுள்ள சிஸ்டயின் தேவாலயத்தினுள் ஆகும்.
(2) உரோமிலுள்ள புனித பீட்டர் தேவாலயத்திலாகும்.
(3) உரோமிலுள்ள ஸ்டன்சா டெலா சிக்னசுரா சிலைமனையிலாகும்.
(4) பிரான்ஸிலுள்ள லுவர் அருங்காட்சியகத்திலாகும்.
(5) இத்தாலியிலுள்ள புனித மரியாள் டேலா கிரேசி தவச்சாலையிலாகும். (.....

38. இவ் ஓவியத்திற்கான கருப்பொருளாயுள்ள நிகழ்வு மற்றும் சந்தர்ப்பம் தொடர்புபடுவது
(1) காவிய சாஸ்திர விடயத்துடன் ஆகும்.
(2) மானிட சாஸ்திர விடயத்துடன் ஆகும்.
(3) தத்துவார்த்த குருகுலத்துடன் ஆகும்.
(4) ஞானவாத விடயங்களுடன் ஆகும்.
(5) பௌதீகவாத எண்ணக்கருக்களுடன் ஆகும். (.....

39. இவ் ஓவிய ஒழுங்கமைப்பின் அடிப்படை நோக்கமானது,
(1) பல்வேறு மானிட சாஸ்திரவியலாளர்கள் அவர்களின் கடமைகளில் ஈடுபடும் விதத்தை விரிவாகக் காட்டுவதாகும்.
(2) பல்வேறு கருத்துடையவர்களின் நடத்தைகளை சித்திரத் தளத்தின் மீது காட்டுவதாகும்.
(3) மத்தியமயப்படுத்தப்பட்ட கட்டடக் கலை மாதிரி மற்றும் சரியான தூரதரிசன கோட்பாட்டின் மீது வரைந்து காட்டுதலாகும்.
(4) சமூக தத்துவவியலாளர்கள் தளம் முழுவதும் முறையற்ற விதத்தில் பரவியுள்ளவாறு வரைவதாகும்.
(5) கட்டடக் கலைப் பண்புகள், மனித உருவங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பல படிமுறைகளில் ஓவியத்தைத் திட்டமிடுதலாகும். (.....

40. இவ் ஓவியம்,
(1) செயற்பாட்டுடனான இருபது மனித உருவங்களுக்கும் மேற்பட்ட தொகையினரை தளம் மீது பரவலாகப் பயன்படுத்தியிருக்கும் விதத்தின் அடிப்படையில் கலைஞனின் வெளிப்பாட்டுத் தன்மையைப் பாராட்டலாம்.
(2) கிரேக்க தத்துவவியலாளர் கூட்டத்தைச் சுற்றியுள்ள கட்டடக்கலை சார்ந்த பின்னணியை ஒழுங்கமைத்துள்ள விதத்தில் வெளிப்படுத்துதலின் பொருளை அழுத்தமாக்குவதற்குக் காரணமாய் அமைந்தமையைப் பாராட்டலாம்.
(3) பல்வேறு காலங்களுக்குரிய தனிநபர் பாத்திரங்களை ஒரே தளத்தில் ஒழுங்கமைத்திருப்பதன் மூலம், வெளிப்படுத்தலின் பொருள் மிகவும் மேலோங்கியிருத்தல் பாராட்டுக்குரியதாகும்.
(4) வெளிக்காட்டும் பாரிய மற்றும் கவர்ச்சியான கட்டட நிர்மாண மாதிரியானது அங்கிருக்கும் ஞானிகளின் அறிவு மற்றும் கம்பீரம் கவனத்திற் கொள்ளப்படுவதற்கு ஆதாரமாக அமைவது பாராட்டுக்குரியதாகும்.
(5) முக்கியமான பாத்திரங்கள் ஒரு முகப்படும் வகையில் அவர்களின் ஒன்றிற்கொன்று முரணான கருத்துக்களை குறியீடாகக் காட்டுவதற்கு எடுத்திருக்கும் முயற்சியின் மூலம் வெளிப்பாட்டின் பொருள் அழுத்தமாக்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரியதாகும். (.....

* *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2023 (2024)

විෂය අංකය
பாட இலக்கம் **51**

විෂයය
பாடம் **சித்திரக்கலை**

ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
I පත්‍රය /பத்திரம் I

ප්‍රශ්න අංකය வினா இல.	පිළිතුරු අංකය விடை இல.	ප්‍රශ්න අංකය வினா இல.	පිළිතුරු අංකය விடை இல.	ප්‍රශ්න අංකය வினா இல.	පිළිතුරු අංකය விடை இல.	ප්‍රශ්න අංකය வினா இல.	පිළිතුරු අංකය விடை இல.
01.	1	11.	2	21.	1	31.	2
02.	4	12.	1	22.	2	32.	1
03.	1	13.	2	23.	3	33.	2
04.	1	14.	4	24.	3	34.	4
05.	4	15.	1	25.	5	35.	3
06.	4	16.	4	26.	3	36.	4
07.	2 හෝ 4	17.	5	27.	2	37.	3
08.	1	18.	2	28.	4	38.	3
09.	5	19.	4	29.	5	39.	3
10.	3	20.	3	30.	2	40.	4

- විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 40 = 40

සියලු ම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

චිත්‍ර කලාව I
சித்திரக்கலை I
Art I

51 T I

பகுதி II

* இப்பகுதி **மூன்று** உப பகுதிகளைக் கொண்டுள்ளது.
* **'அ'** பகுதியிலிருந்து எவையேனும் **இரண்டு** வினாக்களையும் **'ஆ', 'இ'** ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **ஒரு** வினா வீதமும் தெரிவுசெய்து **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

(தேவையான இடங்களில் பரும்படிப் படங்களைப் பயன்படுத்துதல் உங்களுக்கு அனுகூலமாக அமையும்.)

பகுதி - அ

(சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இலங்கை)

1. அநுராதபுர யுகத்தில் தோன்றிய கலை நிர்மாணங்களுள் புத்தர் சிலை உன்னத கலை நிர்மாணிப்பாகும்.

(i) இலங்கையில் புத்தர் சிலை நிர்மாணிப்பிற்கு கிடைத்துள்ள இந்திய கலைச் செல்வாக்குகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) பன்குளியவில் உள்ள சிலையின் புறத்தோற்றப் பண்புகள் பற்றி சிறிய அறிமுகமொன்றைச் செய்க. (05 புள்ளிகள்)

(iii) 'மஹாஇலுப்பள்ளம சிலை' மற்றும் 'அவுக்கண சிலை'களுக்கிடையில் நிலவும் தொடர்பு, மெய்ந்நிலைகள், ஊடகப் பயன்பாடு, முத்திரைகள், செல்வாக்கு என்பவற்றினூடாக ஒப்பிட்டு விவரிக்குக. (08 புள்ளிகள்)

2. இலங்கையில் நிலவிய புராதன ஓவியக் கலைக்குப் பதிலாக 18ம் நூற்றாண்டில் கண்டிய ஓவிய மரபாக புதிய கலைப் போக்குகள் தோன்றியதோடு, பின் அது கீழ்நாட்டுப் பிரதேசங்களுக்கும் பரவியது.

(i) கண்டிய யுக கலைஞர்களுக்கு அடிப்படையாய் அமைந்த கலைத்துவப் பண்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) தம்புள்ளை விகாரையின் அனோதப்த குட்டை ஓவியம் பற்றி சிறிய அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

(iii) கண்டிய மரபின் கீழ்நாட்டு கலைப்பாணிக்கமைய வரையப்பட்ட முல்கிரிகல விகாரையில் தேலபத்த ஜாதகக் கதையின் 'செவிப்புலன்களை கவரும்' (பாடகர்கள்) எனும் ஓவியத்திற்கும் கத்தலுவ பூர்வாராமையின் மஹாதன சிட்டுவரயா கதையின் 'சங்கீதம் மற்றும் மகிழ்ச்சி அடைதல்' எனும் ஓவியத்திற்குமிடையில் காணப்படும் கருப்பொருள், வெளியைப் பயன்படுத்தல், வர்ணப் பயன்பாடு, ஒழுங்கமைப்பு பற்றி ஒப்பிட்டு விளக்குக. (08 புள்ளிகள்)

3. இலங்கையில் பிரபல்யமாக நிலவிய கலைக் கைத்தொழிலாக உலோகக் கலை நிர்மாணங்களைக் கருதமுடியும்.

(i) 'மாலாதாரா' சிலை நிர்மாணிக்கப்பட்டிருக்கும் ஊடகம் மற்றும் நுட்ப முறையைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) 'அவலோதிகேஸ்வரர்' போதி சத்துவர் சிலையைப் பற்றி சிறிய அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

(iii) 'டெடிகம கொட்ட விகாரையில் கண்டெடுக்கப்பட்ட யானை விளக்கு விஞ்ஞான நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டதாகும்.' இதனை ஊடகப் பாவனை, மாதிரி, தொழில்நுட்ப உபாயம் மற்றும் பூரணத்துவம் என்பனவற்றைக் கொண்டு மதிப்பீடு செய்க. (08 புள்ளிகள்)

CamScanner

பகுதி - ஆ

(சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இந்தியா)

4. மௌரிய யுகத்தில் ஆரம்பமான பௌத்த கலை, பல குருகுலங்கள் ஊடாக வளர்ச்சி அடைந்தது.

(i) கனிஷ்க அரசனது காலகட்டத்தில் பௌத்த கலைகளின் முன்னேற்றத்திற்குப் பங்களித்த **இரண்டு** குருகுலங்களின் பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)

(ii) சாரநாத் தூபித் தலை பற்றி சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iii) பாருத்தின் 'ஜேதவனத்தை வணங்குதல்' மற்றும் அமராவதியின் 'நாலாகிரி தமனய' எனும் இரு செதுக்கல்களின் நிகழ்வுகள் சித்தரிப்பு, நுட்பத் திறன்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒப்பீட்டுரீதியான மதிப்பீடு செய்க. (08 புள்ளிகள்)

5. பல்லவ கலை மரபின் பின் தோன்றிய சோழர் கலை மரபில் கட்டிடக் கலையைப் போன்றே சிற்பக் கலை ஒன்றுக்கொன்று தனித்துவமான பண்புகளைக் கொண்டு வளர்ச்சி அடைந்துள்ளது.

(i) பல்லவ கட்டிடக் கலை நிர்மாணங்களில் காணக்கூடிய பிரதான கட்டிடக் கலை முறைகள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) கடற்கரை தேவாலயம் பற்றி சுருக்கமான கலைத்துவ மதிப்பீட்டினை மேற்கொள்க. (05 புள்ளிகள்)

(iii) 'கல்யாண சுந்தரர்' சிலை தொடர்பில் அதன் உள்ளடக்கம், ஊடகம், மாதிரி, கலைத்துவப் பெறுமதி என்பன குறித்து மதிப்பீடு செய்க. (08 புள்ளிகள்)

பகுதி - இ

(சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)

6. 19ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் வசித்த கலைஞர்கள் செய்த புதிய முயற்சிகள் ஓவியக் கலையில் பல்வேறு உபவாதங்கள் தோன்றுவதற்கு காரணமாயின.

(i) பிரான்சில் சலோனுக்கு எதிராக செயற்பட்ட கலைஞர்கள் **இருவரைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) மனப்பதிவுவாதக் கலை இயக்கத்திற்கு சமகாலத்தில் நிர்மாணிப்பில் ஈடுபட்ட ஒகுஸ்ட் ரொடேங் கலைஞனின் 'காடு' (calais) எனும் கூட்டுச் சிலை பற்றி சிறு அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

(iii) பிற்பட்ட மனப்பதிவுவாத கலைஞரான போல் சேசானின் 'வெடிப்புகள் ஏற்பட்ட சுவர்களுடன் கூடிய வீடு' (The house with the cracked walls) மற்றும் கனவடிவவாத ஓவிய கலைஞர் ஜோசப் புரோக்கின் 'வீடு மற்றும் மரங்கள்' (House and Trees) எனும் இரு ஓவியங்கள் பற்றி ஒழுங்கமைப்பு, மாதிரி, வர்ணப் பயன்பாடு, பூரணத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒப்பீட்டுரீதியாக விவரிக்குக. (08 புள்ளிகள்)

7. உரோமாபுரி கட்டிடக் கலை மற்றும் சிற்பக் கலைகளில் மிகவும் முன்னேற்றமடைந்த அரசாகும்.

(i) வெற்றி வளைவுகள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) 'கெரகெல்லா (cracalla) மார்பளவு சிலை' பற்றி சிறு அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

(iii) உரோம கட்டிடக் கலையில் அனைத்து யுகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நிர்மாணிக்கப்பட்ட குளோசியம், மாபெரும் நாடக அரங்காகும். மாதிரி, கட்டிடக்கலைப் பண்புகளின் பயன்பாடு, நவீன நிலைகள் என்பவற்றை உள்ளடக்கி ஆராய்க. (08 புள்ளிகள்)

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

චිත්‍ර කලාව	I
சித்திரக்கலை	I
Art	I

51 T I

பகுதி II

* இப்பகுதி **மூன்று** உப பகுதிகளைக் கொண்டுள்ளது.
* **'அ'** பகுதியிலிருந்து எவையேனும் **இரண்டு** வினாக்களையும் **'ஆ', 'இ'** ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினா வீதமும் தெரிவுசெய்து **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

(தேவையான இடங்களில் பரும்படிப் படங்களைப் பயன்படுத்துதல் உங்களுக்கு அனுகூலமாக அமையும்.)

பகுதி - அ

(சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இலங்கை)

1. அநுராதபுர யுகத்தில் தோன்றிய கலை நிர்மாணங்களுள் புத்தர் சிலை உன்னத கலை நிர்மாணிப்பாகும்.

   (i) இலங்கையில் புத்தர் சிலை நிர்மாணிப்பிற்கு கிடைத்துள்ள இந்திய கலைச் செல்வாக்குகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

   (ii) பன்குளியவில் உள்ள சிலையின் புறத்தோற்றப் பண்புகள் பற்றி சிறிய அறிமுகமொன்றைச் செய்க. (05 புள்ளிகள்)

   (iii) 'மஹாஇலுப்பள்ளம சிலை' மற்றும் 'அவுக்கண சிலை'களுக்கிடையில் நிலவும் தொடர்பு, மெய்ந்நிலைகள், ஊடகப் பயன்பாடு, முத்திரைகள், செல்வாக்கு என்பவற்றினூடாக ஒப்பிட்டு விவரிக்குக. (08 புள்ளிகள்)

2. இலங்கையில் நிலவிய புராதன ஓவியக் கலைக்குப் பதிலாக 18ம் நூற்றாண்டில் கண்டிய ஓவிய மரபாக புதிய கலைப் போக்குகள் தோன்றியதோடு, பின் அது கீழ்நாட்டுப் பிரதேசங்களுக்கும் பரவியது.

   (i) கண்டிய யுக கலைஞர்களுக்கு அடிப்படையாய் அமைந்த கலைத்துவப் பண்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

   (ii) தம்புள்ளை விகாரையின் அனோதப்த குட்டை ஓவியம் பற்றி சிறிய அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

   (iii) கண்டிய மரபின் கீழ்நாட்டு கலைப்பாணிக்கமைய வரையப்பட்ட முல்கிரிகல விகாரையில் தேலபத்த ஜாதகக் கதையின் 'செவிப்புலன்களை கவரும்' (பாடகர்கள்) எனும் ஓவியத்திற்கும் கத்தலுவ பூர்வாராமையின் மஹாதன சிட்டுவரயா கதையின் 'சங்கீதம் மற்றும் மகிழ்ச்சி அடைதல்' எனும் ஓவியத்திற்குமிடையில் காணப்படும் கருப்பொருள், வெளியைப் பயன்படுத்தல், வர்ணப் பயன்பாடு, ஒழுங்கமைப்பு பற்றி ஒப்பிட்டு விளக்குக. (08 புள்ளிகள்)

3. இலங்கையில் பிரபல்யமாக நிலவிய கலைக் கைத்தொழிலாக உலோகக் கலை நிர்மாணங்களைக் கருதமுடியும்.

   (i) 'மாலாதாரா' சிலை நிர்மாணிக்கப்பட்டிருக்கும் ஊடகம் மற்றும் நுட்ப முறையைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

   (ii) 'அவலோதிகேஸ்வரர்' போதி சத்துவர் சிலையைப் பற்றி சிறிய அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

   (iii) 'டெடிகம கொட்ட விகாரையில் கண்டெடுக்கப்பட்ட யானை விளக்கு விஞ்ஞான நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டதாகும்.' இதனை ஊடகப் பாவனை, மாதிரி, தொழில்நுட்ப உபாயம் மற்றும் பூரணத்துவம் என்பனவற்றைக் கொண்டு மதிப்பீடு செய்க. (08 புள்ளிகள்)

CamScanner

1. அநுராதபுர யுகத்தில் தோன்றிய கலை நிர்மாணங்களுள் புத்தர் சிலை உன்னத கலை நிர்மாணிப்பாகும்.

(i) இலங்கையில் புத்தர் சிலை நிர்மாணிப்பிற்கு கிடைத்துள்ள இந்திய கலைச் செல்வாக்குகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) பன்குளியவில் உள்ள சிலையின் புறத்தோற்றப் பண்புகள் பற்றி சிறிய அறிமுகமொன்றைச் செய்க. (05 புள்ளிகள்)

(iii) 'மஹாஇலுப்பள்ளம சிலை' மற்றும் 'அவுக்கண சிலை'களுக்கிடையில் நிலவும் தொடர்பு, மெய்ந்நிலைகள், ஊடகப் பயன்பாடு, முத்திரைகள், செல்வாக்கு என்பவற்றினூடாக ஒப்பிட்டு விவரிக்குக. (08 புள்ளிகள்)

(i)
- அமராவதி கலைமரபு
- குப்த கலைமரபு
- பல்லவ கலைமரபு

(ii)
- இது கி.பி 7ம் நூற்றாண்டைச் சேர்ந்தது. அனுராதபுரகாலத்தைச் சேர்ந்தது.
- அனுராதபுரம் பங்குளிய பிரதேச அசோகக்காராமயாவில் கிடைத்தமையால் பங்குளிய புத்தர் சி என அழைக்கப்படுகிறது.
- இதன் ஊடகமானது சுண்ணாம்புக்கல் கலந்த ஒருவகை சிறப்பான கல் ஊடகத்தை (ப்ராறைக்க கொண்டுள்ளது.
- வலது கை அபயமுத்திரையும், இடது கை கடக ஹஸ்த முத்திரையும் காட்டியுள்ளது. கைகள் சேதமடைந்துள்ளது.
- கால்கள் வீராசன முறையயில் அமைந்துள்ளது.
- சுருள் கேசத்துடன் சுவடிய சிறிய உச்சிக் குடும்பி காட்டப்பட்டுள்ளது. (உன்னிசியம்)
- சிலையின் பல பகுதிகள் இயற்கைத் தாக்கத்திற்கு உள்ளாகி தேய்வடைந்து காணப்படுகிறது.
- முகம் சாந்தமானதாகவும் கருணையானதாகவும் ஆன்மீக பண்புகளுடன் காட்டப்பட்டுள்ளன.
- கண்களுக்கு இரத்தினக் கற்கள் பதிக்கப்பட்டிருந்தமைக்கான சான்றுகள் காணப்படுகிறது.
- உடலோடு ஒட்டிய சுருக்கங்கள் அற்ற காவி உடை காட்டப்பட்டுள்ளது.
- இதன் உயரம் 6 அடி 9 அங்குலம் கொண்டதாகும்.

(iii)
- மஹாஇலுப்பள்ளம் , அவுக்கண ஆகிய இரு புத்தர்சிலைகளும் ஒரே காலத்தவை.
- கண்கள் மூக்குநுனியை நோக்கியுள்ளன.
- தலைமூடி (கேசம்) சுருட்டப்பட்டுள்ளன.
- புத்தர்சிலைகளின் காது நீளமானவை.
- ஆத்மீக குணப்பண்புகள் அதிகம். (அன்பு, சாந்தம், பருணை, இரக்கம்)
- உடல் அங்கங்கள் தெரியும் வண்ணம் ஆடை மென்மையான மடிப்புக்களைக் கொண்டதாக காவியுடை காணப்படுகின்றன.
- வலது கை அபய முத்திரையையும், அங்கியைத் தாங்கியுள்ள இடக்கை கடகஹஸ்த முத்திரையையும் கொண்டுள்ள. (மஹாஇலுபள்ளம் புத்த சிலையின் வலது கரம் உடைந்துள்
- இந்திய அமராவதி கலைப் பண்புகளை எடுத்துக் காட்டுகின்றன.

வேறுபாடுகள்

அவுக்கண	மஹாஇலுப்பள்ளம
தலையில் தீச்சுடர் பின்னர் சேர்க்கப்பட்டுள்ளது.	தலையில் தீச்சுடர் இல்லை
உயரம் 38 அடி 10 அங்குலம்	உயரம் 6 அடி
கி.பி5ம் நூற்றாண்டுக்குரியது	கி.பி 2ம் நூற்றாண்டுக்குரியது
கருங்கல் ஊடகத்தினால் ஆக்கப்பட்டுள்ளது.	சுண்ணாம்புக்கல் ஊடகத்தால் ஆக்கப்பட்டுள்ளது.
மலையுடன் சேர்ந்து செதுக்கப்பட்டுள்ளது	பூரண புடைப்பாக செதுக்கப்பட்டுள்ளது.

2. இலங்கையில் நிலவிய புராதன ஓவியக் கலைக்குப் பதிலாக 18ம் நூற்றாண்டில் கண்டிய ஓவிய மரபாக புதிய கலைப் போக்குகள் தோன்றியதோடு, பின் அது கீழ்நாட்டுப் பிரதேசங்களுக்கும் பரவியது.

(i) கண்டிய யுக கலைஞர்களுக்கு அடிப்படையாய் அமைந்த கலைத்துவப் பண்புகள் **இரண்டைச்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) தம்புள்ளை விகாரையின் அனோதப்த குட்டை ஓவியம் பற்றி சிறிய அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

(iii) கண்டிய மரபின் கீழ்நாட்டு கலைப்பாணிக்கமைய வரையப்பட்ட முல்கிரிகல விகாரையில் தேலபத்த ஜாதகக் கதையின் 'செவிப்புலன்களை கவரும்' (பாடகர்கள்) எனும் ஓவியத்திற்கும் கத்தலுவ பூர்வாராமையின் மஹாதன சிட்டுவரயா கதையின் 'சங்கீதம் மற்றும் மகிழ்ச்சி அடைதல்' எனும் ஓவியத்திற்குமிடையில் காணப்படும் கருப்பொருள், வெளியைப் பயன்படுத்தல், வர்ணப் பயன்பாடு, ஒழுங்கமைப்பு பற்றி ஒப்பிட்டு விளக்குக. (08 புள்ளிகள்)

(i) -
- இரேகைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.
- பக்கத் தோற்றப்பார்வை
- இரு பரிமான ஓவிய முறை - தட்டைவர்ணப்பயன்பாடு
- பிண்ணனிக்கு சிவப்பு நிறப் பயன்பாடும் , அலங்கார உருக்களும் வரையப்பட்டுள்ளமை
- தொடர் சித்திர மரபு (சித்திராவலி)
- ஜாதகக் கதைகளுக்கு முக்கியத்துவம்
- புத்த உருவங்கள் நேராக வரையப்பட்டுள்ளது.
- உருவங்களை ஒரே தளத்தில் காட்டுதல்
- அளவுதிட்டம் , தூரநோக்கு பின்பற்றாமை

(ii)-
- தம்புள்ள குகையின் மூன்றாவது குகையின் சுவரில் வரையப்பட்டுள்ளது.
- நான்கு நதிகள் உருவாகி அதிலிருந்து நீர் வெளியேறிச் செல்லும் விதம் சித்தரிக்கப்பட்டுள்ளது.
- இமய மலையில் உள்ள அனோதப்த ஏரியின் சித்தரிப்பு காட்டப்பட்டுள்ளது.
- புத்தர் ஞானம் பெற்ற பின் இக் குளத்திற்கு வந்ததாகக் கூறப்படுகின்றது.
- தாமரைக்குளம், பூக்கள், மரங்கள், பறைவைகள், சிங்கம், யானை என்பன வரயப்பட்டுள்ளது.
- குளத்திற்கு அருகில் புத்த உருவம் மூன்று வரயப்பட்டுள்ளது.
- குளத்திலிருந்து வெளியேறும் நீரில் இருந்து சிங்கம், குதிரை, யானை, எருது ஆகியன உருவாகி வெளியேறுவதாக உருவகிக்கப்பட்டுள்ளது.
- இவ் ஓவியத்தில் ஆகாய பார்வையில் குளமும் நேர்பார்வையில் புத்த உருவங்களும் மரமும் நேர்பார்வையாகவும் வரயப்பட்டுள்ளது.
- இங்கு இரு வேறு பார்வை முறைகள் ஒரே தளத்தில் வரயப்பட்டுள்ளன.
- பாரம்பரிய கண்டிய வர்ணப் பாவனை பின்னணியாக (சிவப்பு) உபயோபகிக்கப்பட்டுள்ளது.

CamScanner

(iii) - ஒரே காலப்பகுதியைச் சேர்ந்தவை. (கி.பி 1780-1850 வரை)
- (ரெம்பரா) பிரெஸ்கோ சீக்கோ நுட்பமுறையில் வரையப்பட்டுள்ளது.
- தொடர்கதை (சித்திரவலிய) சித்திர மரபில் ஓவியங்கள் காணப்படுகின்றன.
- ஜாதகக்கதையை கருப்பொருளாக கொண்டுள்ளன.
- மென்மையான இரேகைகளால் நிறைவைக் காட்டியிருத்தல்.
- நேரான நெருக்கமான அசைவுகளும் உருவங்கள் நடமாடும் மனிதமெய்நிலைகள் காட்டப்பட்டுள்ளன.
- இயற்கைத் தன்மைக்கு ஏற்ப முப்பரிமாணத்திற்கு முயற்சித்தல்.
- தாழ்நில விகாரைச் சித்திரத்திற்குரிய பண்புகள் காணப்படுதல்.
- ஐரோப்பிய செல்வாக்கும் சமகால சமூகப் பின்னணியின் தாக்கமும் ஏற்பட்ட விதத்தை எடுத்துக் காட்டும் ஓவியங்களாக இவை கருதப்படுகின்றன.

வேற்றுமை

தேலபத்த ஜாதகக்கதை	மகாதன செல்வந்தரின் கதை - இசையும் களிப்பும்
பின்னணி நிரப்புவதற்கு பாரிய மரங்கள்	ஐரோப்பிய கட்டடங்கள், பொருட்கள்.
ஊர்வலமாக இசைமீட்டிச் செல்லும் வாத்தியக் குழுவினர் சித்திரிக்கப்பட்டுள்ளனர்.	வரலாற்றுக்கதை- இசையுடன் கூடிய உல்லாசம் எனும் காட்சியும் நடன், மேளக்காரர் எனும் காட்சியும் சித்தரிக்கப்பட்டுள்ளன.
உருவங்கள் ஒரே தளத்தில் காட்டப்பட்டுள்ளது.	தளத்தை முழுவதும் பயன்படுத்தி சிக்கலான முறையில் வெளி நிரப்பப்பட்டுள்ளது.
அளவுத்திட்டம், தூரக்காட்சி விதிமுறைகள் கவனத்தில் கொள்ளப்படாமை	அளவுத்திட்டம், தூரக்காட்சி விதிமுறைகள் ஓரளவு கவனத்தில் கொள்ளபடாமை
இலங்கைக்கே உரித்தான பாரம்பரிய உடைகளில் முக்காடிடப்பட்ட பெண்ணுருவங்கள் காட்டப்பட்டுள்ளன.	கோட், தொப்பி, நீண்ட ஆடைகள் (ஐரோப்பிய ஆடைகள்)
பாரம்பரிய இசைக்கருவிகளான றபான், மகுடி , சங்கு என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.	மேலைத்தேச இசைக்கருவிகள் , (கிற்றார்) வீட்டுப்பாவனைப் பொருட்கள்.
கலைஞர் குறிப்பிடப்படவில்லை	கடொல்கல்லே ஓவியப் பரம்பரையைச் சேர்ந்த "மகா சித்தரா" (சிறி சித்தரா) வும் பொட்ட சித்தராவும் இதற்கான கலைஞர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.
மனித உருவத்தின் வடிவங்கள் மிக உயிரோட்டமான வகையில் காட்டப்பட்டுள்ளது.	மனித வடிவங்களில் உயிரோட்டமான தன்மை குறைவு

இலங்கையில் பிரபல்யமாக நிலவிய கலைக் கைத்தொழிலாக உலோகக் கலை நிர்மாணங்களைக் கருதமுடியும்.

(i) 'மாலாதாரா' சிலை நிர்மாணிக்கப்பட்டிருக்கும் ஊடகம் மற்றும் நுட்ப முறையைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) 'அவலோதிகேஸ்வரர்' போதி சத்துவர் சிலையைப் பற்றி சிறிய அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

(ii) 'டெடிகம கொட்ட விகாரையில் கண்டெடுக்கப்பட்ட யானை விளக்கு விஞ்ஞான நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டதாகும்.' இதனை ஊடகப் பாவனை, மாதிரி, தொழில்நுட்ப உபாயம் மற்றும் பூரணத்துவம் என்பனவற்றைக் கொண்டு மதிப்பீடு செய்க. (08 புள்ளிகள்)

(i) ஊடகம்
- வெள்ளி கலந்த கலப்பு உலோகம் / வெள்ளி
நுட்பம்
- திண்ம வார்ப்பு முறை / வார்ப்பு முறை

(ii)- வெஹெரகல சிறிசங்கபோ விகாரைப் பூமியில் கண்டுபிடிக்கப்பட்டது.
- திண்ம வார்ப்பு முறையில் முழுப்புடைப்பாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- தங்க முலாம் பூசப்பட்ட சிலையாகும்.
- இதன் ஊடகம் வெண்கலமாகும்.
- மகாராஜ லலிதாசனம், ராஜலீலாசனம் ஆகிய இருமெய்நிலைகளில் ஒன்றினைத்து நிர்மானிக்கப்பட்டுள்ளது.
- வலது கை கடகஹஸ்த முத்திரையை காட்டியுள்ளது. இக் கையில் தாமரை மலர் ஒன்று இருந்திருக்க கூடும் என கருதப்படுகிறது.
- இடது கை உடலின் பாரத்தை தாங்கிய வண்ணம் சற்று ஊன்றி காட்டப்பட்டுள்ளது.
- நீண்ட ஜடாமுடியும், தோழில் சிறிய துண்டொன்றும் காட்டப்பட்டுள்ளது.
- உடலின் மெய்நிலைகள் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளது. தசைகளின் இயல்பு தன்மை சிறப்பாக காட்டியுள்ளனர்.

(iii)- 1951 ஆண்டு தெடிகம கொட்ட வெஹர சைத்தியம் அமைந்த பகுதியில் இவ் விளக்கு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.
- இதன் ஊடகம் பித்தளையாகும்.
- வார்ப்பு முறையில் உருவாக்கப்பட்டது.
- இலங்கை வார்ப்புக் கைத்தொழிலில் மிகச்சிறந்த கலைப்படைப்பாகக் கருதப்படுகிறது.
- யானையின் உடலில் பிரதான பகுதி எண்ணைத் தொட்டியாக அமைந்துள்ளது.
- உயரம் 28.5 cm அளவுடையது.
- யானையின் மீது செல்லும் ஒரு அரசனும் அவருக்குப் பின்னால் மகாராணியும் விளக்கில் குறிக்கப்பட்டுள்ளனர்.
- விளக்கை தொங்கவிடப்பட்டிருக்கும் சங்கிலியானது நடன மாதுக்கள் இருவரால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.
- தொழில் நுட்பத்தின் மிகவும் விசேட முறையொன்றினால் விளக்கு ஒளிருகின்றது.

CamScanner

4. மௌரிய யுகத்தில் ஆரம்பமான பௌத்த கலை, பல குருகுலங்கள் ஊடாக வளர்ச்சி அடைந்தது.

(i) கனிஷ்க அரசனது காலகட்டத்தில் பௌத்த கலைகளின் முன்னேற்றத்திற்குப் பங்களித்த இரண்டு குருகுலங்களின் பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)

(ii) சாரநாத் தூபித் தலை பற்றி சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iii) பாருத்தின் 'ஜேதவனத்தை வணங்குதல்' மற்றும் அமராவதியின் 'நாலாகிரி தமனய' எனும் இரு செதுக்கல்களின் நிகழ்வுகள் சித்தரிப்பு, நுட்பத் திறன்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒப்பீட்டுரீதியான மதிப்பீடு செய்க. (08 புள்ளிகள்)

(i) - மதுராக் குருகுலம்
- காந்தார குரு குலம்

(ii)- சாரநாத் எனுமிடத்தில் அமைந்த தூண் சாரநாத் அசோகத் தூண் எனப்படுகின்றது.
- புத்தபெருமான் முதன் முறையாக தர்மபோதனை செய்த இடத்தினை நினைவுகூரும் முகமாக அமைக்கப்பட்டுள்ளது.
- இத்தூண் தலை மௌரிய காலத்தில் ஆக்கப்பட்ட உயர் கலைப்பண்புகளைக் கொண்ட ஒரு கலைப்படைப்பாகும்.
- இத் தூணில் மிருக உருவங்களுக்கு இடையில் தர்மச்சக்கரம் செதுக்கப்பட்டுள்ளது.
- இத்தூண் தலை கபிலநிற மணற்கல்லினால் நிர்மாணிக்கப்பட்டது.
- இத்தூண் தலை உச்சிப்பகுதியில் மணிப்போதிகை, பீடம், விலங்குருவம் எனும் பகுதிகள் சிறப்பான கலை நயத்துடன் அமைந்துள்ளன.
- தூணின் தலைப் பகுதியில் வட்டவடிவமான மேடை போன்ற பீடத்தின் மீது இணைந்த சிங்க உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.
- சிங்கவுருவங்கள் பொருந்தியிருக்கும் தன்மை பூரணப் பாட்டினையும் நேர்த்தியான தன்மையினையும் கொண்டுள்ளது.
- இச்சிங்க உருவங்களின் நரம்பு, தசை போன்றவற்றைக் கலைஞன் நுணுக்கமாக ஆராய்ந்து இயற்கைத் தோற்றம் உயர்வான முறையில், கலையம்சம் பொருந்தியதாகவும் புதுமைப்பாட்டுடனும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
- நான்கு திசைகளையும் நோக்கியவாறு சிங்க உருவங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இவை புத்தபெருமான்நாற்திசையும்நோக்கித்தர்மபோதனைசெய்தவிடயத்தினைஅடையாளப்படுத்துகின்றது.
- நான்கு திசைகளிலுள்ள நான்கு சிங்க உருவங்களும் அசோக மன்னனுடைய ஆட்சி, பலம், செல்வச் செழிப்பு என்பனவற்றை குறிப்பிடுவதாகவும் கருதப்படுகிறது.
- பீடத்தின் வெளிச்சுவர் மீது யானை, குதிரை, எருது, சிங்கம் ஆகிய விலங்குகள் வரிசையாக செதுக்கப்பட்டுள்ளன.இவ்விலங்குகளுக்கு இடையில் தர்மச்சக்கரம் செதுக்கப்பட்டுள்ளது.
- இவ்விலங்குருவங்கள் நான்கு திசைகளைக் குறிப்பதாக வின்சன் ஸ்மித் கருத்துத் தெரிவித்துள்ளார்.
- யானை உருவத்தினால் சித்தார்த்த குமாரனின் பிறப்பு அல்லது மகாயாதேவியின் கனவும், குதிரை உருவினால் இல்லறத்தைக் கைவிட்டுச் செல்லுதலும் சிங்க உருவினால் புத்தராகுதலும், எருது உருவத்தினால் சிறுபராயம் அல்லது ஏர்பூட்டு வைபவமும் காட்டப்படுவதாக ஆனந்த குருகே கூறுகின்றார்.
- இத்தூண் பாரசீக நாட்டின் செல்வாக்கைத் தழுவியதாக இது காணப்படுகின்றது.
- இது சுதேசிய மரச்செதுக்கல் வேலைப்பாடுகளுக்குரித்தான சிறப்புமிக்க கலையம்சத்தினைக் கொண்டுள்ளதாகவும் குறிப்பிடலாம்.

(iii) ஜேதவனவை வணங்குதல் (பாரூத்
- அனேபிண்டு தனவந்தர் புத்தபெருமானுக்கு ஜேதவனவை காணிக்கையாக வழங்கும் நிகழ்வு குறிக்கப்பட்டுள்ளது.

- வண்டில் மூலம் கொண்டுவரப்பட்ட தங்கக் காசுகள் இரு மனிதர்களால் பரப்பி விடப்படும் விதத்தையும் ஜேதவனவைக் காணிக்கையாக அளிக்கும் விதத்தையும் வட்டவடிவத் தளத்தில் செதுக்க சிற்பி முனைந்துள்ளார்.
- புத்தபெருமானை அடையாளப்படுத்தி அரச மரமொன்றும் செதுக்கப்பட்டுள்ளது.
- அனேபிண்டு எனப்படும் செல்வந்தர் அரச மரத்தின் அருகே சென்று நீர்க்கெண்டியொன்றினால் நீரூற்றுதலானது ஜேதவனவைக் காணிக்கையாக ஒப்புக் கொடுப்பதை அடையாளப்படுத்துகிறது.
- இக்கதையில் 3 முக்கிய நிகழ்வுகள் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.
  1. வண்டியில் தங்க நாணயங்களை எடுத்து வந்து பறித்தல்
  2. தங்க நாணயங்களை தரையில் பரப்புதல்
  3. அனேபிடு அரசன் ஜேதவனவை காணிக்கையாக வழங்குதல்.
- ஜேதவன காணிக்கையின் பல நிகழ்வுகளும் வட்டவடிவத்தின் ஒரே தளத்தில் செதுக்கப்பட்டமை ஒரு சிறப்பம்சமாகும்.

நாளகிரி யானையை அடக்குதல் (அமராவதி)

- நாளகிரி யானையை அடக்குதல் எனும் செதுக்கல் வட்டவடிவ சிற்ப தகட்டில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- புத்தரைக் கொல்வதற்காக தேவதத்தனால் அனுப்பப்பட்ட மதங்கொண்ட யானையை (கள் அருந்தி விட்டு பாதையிலுள்ள யானையை) புத்தர் அடக்குவது போன்ற காட்சி இங்கு சித்தரிக்கப்பட்டுள்ளது.
- கள் அருந்தி போதையில் இருக்கும் யானை ஒன்று தும்பிக்கையினால் மனிதனொருவனை இழுத்துச் செல்வதையும், மக்களின் பதற்றமான நடத்தையையும் மேல்மாடியில் இருந்து மக்கள் அதனை பார்ப்பதையும், இன்னொரு புறத்தில் மக்கள் புடைசூழ புத்த பெருமான் வரும் காட்சியும், அவருக்கு முன்னால் மதம் கொண்ட யானை அடங்கி வணங்குவதையும் இதில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- இக் கதையை 3 நிகழ்வாக பிரித்து வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
  1. மதம் கொண்ட யானை தும்பிக்கையில் மனிதன் ஒருவனை இழுத்துச் செல்லும் நிகழ்வு
  2. பயத்தினால் மக்கள் அஞ்சி ஓடும் காட்சி
  3. சாந்தமாக நிற்கும் புத்தர்முன் கால்களை மண்டியிட்டு வணங்கும் யானை
- இச் செதுக்கலில் மதங்கொண்ட யானை மனிதனை தலைகீழாக பற்றியபடி இழுத்துச் செல்லும் போது அதனைப் பார்த்த மக்கள் அஞ்சுவதும், பெண்கள் பயத்தால் ஆண்களைத் தழுவி ஆதரவு தேடுதல், பின்னணியில் கட்டடமாடத்தில் சிலர் இக்காட்சியை பார்ப்பது போன்ற நிகழ்வு மிக தத்ரூபமாக செதுக்கப்பட்டுள்ளது.
- இங்குள்ள மக்களின் முகங்களில் பயம். யானையின் கொடூர தன்மை, புத்தரின் சாந்தத்தன்மை, சிறந்த உணர்வு வெளிப்பாடாக வெளிப்பட்டமை இச்செதுக்கலின் உயரிய பண்பை எடுத்துக்காட்டுகிறது. பயம் கொண்ட மக்கள் யன்னல் மூலம் குதித்தோடும் காட்சியில் பயத்தால் ஓடும் தன்மை மிக உணர்வு பூர்வமாகக் காணப்படுதல்.
- இரக்கம், கருணை, பக்தி, பயம் போன்றவற்றை ஒன்றாக ஒரே கற்பாளத்தில் செதுக்கலாக நிர்மாணிக்கப்பட்ட விதம் கலைஞரின் திறமையை எடுத்துக் காட்டுகின்றது. இது போன்ற உணர்ச்சி வெளிப்பாடுடைய செதுக்கல் சாஞ்சி, பாரூத்தில் காணப்படவில்லை.
- இச்செதுக்கலில் உள்ள யானை உருவம் மிக நேர்த்தியாக இயற்கை பண்பு, சிறந்த வெளிப்பாட்டுதிறன், செயற்பாட்டு திறனுடன் காட்டப்பட்டுள்ளது. இச்செதுக்கலின் உயர்கலைப்பண்பு வெளிப்படுகிறது.
- நிகழ்ச்சியுடன் தொடர்புடைய சூழலை வெளிக்காட்டுவது இச் செதுக்கலில் காணக்கூடியதாக உள்ளது.
- இச்செதுக்கலில் தூரதரிசனம் பின்பற்றப்பட்டமை சிறப்புபண்பாகக்காட்டப்பட்டள்ளது.
- இங்கு புத்தர் பெருமானை மனித உருவில் காட்டியுள்ளனர்.

நிகழ்வுகள் சித்தரிப்பு

- அனேபிண்டு தனவந்தர் புத்தபெருமானுக்கு ஜேதவனத்தை காணிக்கையாக வழங்கும் நிகழ்வும், நாளகிரி யானையை அடக்குதல் நிகழ்வும் வட்டவடிவ கற் தகட்டில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

CamScanner

- அனேபிண்டு தனவந்தர் புத்தபெருமானுக்கு ஜேதவனத்தை காணிக்கையாக வழங்குதல் எனும் செதுக்கலில் வண்டில் மூலம் கொண்டுவரப்பட்ட தங்கக் காசுகள் இரு மனிதர்களால் பரப்பி விடப்படும் விதத்தையும் ஜேதவனவைக் காணிக்கையாக அளிக்கும் விதத்தையும் வட்டவடிவத் தளத்தில் சிறப்பாக ஒழுங்கமைத்து செதுக்கப்பட்டதைப் போன்று, நாளகிரி யானையை அடக்குதல் எனும் செதுக்கலில் புத்தரைக் கொல்வதற்காக தேவதத்தனால் அனுப்பப்பட்ட மதங்கொண்ட யானை (கள் அருந்தி விட்டு போதையிலுள்ள யானையை) புத்தர் அடக்குவது போன்ற காட்சியும் வட்டவடிவத் தளத்தில் சிறப்பாக ஒழுங்கமைத்து செதுக்கப்பட்டுள்ளது.
- அனேபிண்டு தனவந்தர் புத்தபெருமானுக்கு ஜேதவனவை காணிக்கையாக வழங்குதல் எனும் செதுக்கலில் புத்தபெருமானை அடையாளப்படுத்தி அரச மரமொன்று செதுக்கப்பட்டுள்ளது. நாளாகிரி யானையை அடக்குதல் எனும் செதுக்கலில் புத்தபெருமானை மனித உருவில் செதுக்கப்பட்டுள்ளது.

நுட்பத் திறன்கள்

- நாளகிரி யானையை அடக்குதல் எனும் செதுக்கலில் மதங்கொண்ட யானை மனிதனை தலைகீழாக பற்றியபடி இழுத்துச் செல்லும் போது அதனைப் பார்த்த மக்கள் அஞ்சுவதும், பெண்கள் பயத்தால் ஆண்களைத் தழுவி ஆதரவு தேடுதல், பின்னணியில் கட்டமாடத்தில் சிலர் இக்காட்சியை பார்ப்பது போன்ற நிகழ்வு மிக தத்ரூபமாகவும், உயிரோட்டமாகவும் செதுக்கப்பட்டுள்ள நுட்பத்தைப் போன்று அனேபிண்டு தனவந்தர் புத்தபெருமானுக்கு ஜேதவனவை காணிக்கையாக வழங்குதல் எனும் செதுக்கலில் தத்ரூபமான தன்மையும், உயிரோட்டமும் குறைவாக உள்ளது.
- அனேபிண்டு தனவந்தர் புத்தபெருமானுக்கு ஜேதவனத்தை காணிக்கையாக வழங்குதல் எனும் கதையில் 3 முக்கிய நிகழ்வுகள் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.
  1. வண்டியில் தங்க நாணயங்களை எடுத்து வந்து பரித்தல்
  2. தங்க நாணயங்களை தரையில் பரப்புதல்
  3. அனேபிடு அரசன் ஜேதவனவை காணிக்கையாக வழங்குதல்.

நாளகிரி யானையை அடக்குதல் எனும் கதையையும் 3 நிகழ்வாக பிரித்து வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

1. மதம் கொண்ட யானை தும்பிக்கையில் மனிதன் ஒருவனை இழுத்துச் செல்லும் நிகழ்வு
2. பயத்தினால் மக்கள் அஞ்சி ஓடும் காட்சி
3. சாந்தமாக நிற்கும் புத்தர்முன் கால்களை மண்டியிட்டு வணங்கும் யானை

- நாளாகிரி யானையை அடக்குதல் எனும் செதுக்கலில் மக்களின் முகங்களின் பயம், யானையின் கொடூரத் தன்மை, புத்தரின் சாந்தமான தன்மை என்பன சிறந்த உணர்வு வெளிப்பாடாக வெளிப்பட்டமை இச்செதுக்கலின் உயரிய பண்பை எடுத்துக்காட்டுகிறது. பயம் கொண்ட மக்கள் மன்னல் மூலம் குதித்தோடும் காட்சியில் பயத்தால் ஓடும் தன்மை மிக உணர்வு பூர்வமாகக் காணப்படுகின்றன. இரக்கம், கருணை, பக்தி, பயம் போன்றவற்றை ஒன்றாக ஒரே கற்பாளத்தில் செதுக்கலாக நிர்மாணிக்கப்பட்ட விதம் கலைஞரின் திறமையை எடுத்துக் காட்டுகின்றது. இது போன்ற உணர்ச்சி வெளிப்பாடுடைய செதுக்கல், அனேபிண்டு தனவந்தர் புத்தபெருமானுக்கு ஜேதவனவை காணிக்கையாக வழங்குதல் எனும் செதுக்கலில் காணப்படவில்லை.

- நாளகிரி யானையை அடக்குதல் எனும் செதுக்கலில் உள்ள யானை உருவம் மிக நேர்த்தியாக இயற்கை பண்பு, சிறந்த வெளிப்பாட்டுதிறன், செயற்பாட்டு திறனுடனும் காட்டப்பட்டுள்ளது. இச்செதுக்கலின் உயர்கலைப்பண்பு வெளிப்படுகிறது. அனேபிண்டு தனவந்தர் புத்தபெருமானுக்கு ஜேதவனவை காணிக்கையாக வழங்குதல் எனும் செதுக்கலில் மிக நேர்த்தியாக இயற்கைப் பண்பு, சிறந்த வெளிப்பாட்டுதிறன், செயற்பாட்டு திறன் காணப்படவில்லை.

- நாளகிரி யானையை அடக்குதல் எனும் செதுக்கலில் தூரதரிசனம் பின்பற்றப்பட்டமை சிறப்புப் பண்பாகக் காட்டப்பட்டுள்ளது. அனேபிண்டு தனவந்தர் புத்தபெருமானுக்கு ஜேதவனவை காணிக்கையாக வழங்குதல் எனும் செதுக்கலில் தூரதரிசனம் பின்பற்றப்படவில்லை.

பல்லவ கலை மரபின் பின் தோன்றிய சோழர் கலை மரபில் கட்டிடக் கலையைப் போன்றே சிற்பக் கலை ஒன்றுக்கொன்று தனித்துவமான பண்புகளைக் கொண்டு வளர்ச்சி அடைந்துள்ளது.

(i) பல்லவ கட்டிடக் கலை நிர்மாணங்களில் காணக்கூடிய பிரதான கட்டிடக் கலை முறைகள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) கடற்கரை தேவாலயம் பற்றி சுருக்கமான கலைத்துவ மதிப்பீட்டினை மேற்கொள்க. (05 புள்ளிகள்)

(iii) 'கல்யாண சுந்தரர்' சிலை தொடர்பில் அதன் உள்ளடக்கம், ஊடகம், மாதிரி, கலைத்துவப் பெறுமதி என்பன குறித்து மதிப்பீடு செய்க. (08 புள்ளிகள்)

(i)

1. குடைவரை கோயில் / குகை மண்டபம் - கல்லை உட்புறம் மட்டும் குடைந்த அமைத்த ஆலயம்
   உ + ம் - திருமூர்த்தி குகை மண்டபம், மகிடாசுரமர்த்தினி குகை மண்டபம்
2. தனிக்கற்கோயில் - கல்லை உட்புறமாகவும், வெளிப்புறமாகவும் குடைந்து உருவாக்கிய கோவில்கள்.
   உ + ம் - பஞ்ச பாண்டவ ரதங்கள்
3. கட்டப்பட்ட கோயில் / கற்றழிக் கோயில் - கற்களைப் பொழிந்து அடுக்கி உருவாக்கப்படும் கோயில்
   உ + ம் - கடற்கரைக்கோயில்

(ii)

- தென் இந்திய கட்ட நிர்மாணிப்புக்கலையின் ஆரம்பகாலத்தில் கட்டப்பட்ட கோவிலாக இக்கடற்கரை கோயில் காணப்படுகின்றது.
- கருங்கற்களைப் பொளிந்து எடுக்கப்பட்டதன் மூலம் கடற்கரை கோவில் கட்டப்பட்டது. இதை கற்றளி முறை என்பர்.
- கி.பி 8 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.
- இக்கோவிலின் பிரதான வாயில்கள் கடலை நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. கடலை நோக்கியவாறு கரையில் நிர்மாணிக்கப்படல் இதன் விசேடமாகும். அதன் வெளிச்சுவர்கள் வெளித்தள்ளி உள்ள மென்மையான செதுக்கல்களினால் உள்ளது.
- கடலில் செல்கின்ற மக்களுக்கு கோவிலின் வாயில் தெரியும்படி அமைந்துள்ளது.
- சற்சதுர அமைப்பைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ள கோவிலின் பிரதான இரண்டு பகுதிகளாகக் காட்டப்பட்டுள்ளன
- சற்சதுரமான அமைப்பை உடைய கர்ப்பக்கிரகம் 2 உள்ளது.
- இவற்றின் மேல் கூராகவும் சரிந்து செல்லும் அமைப்பை உடைய கோபுரமும் உள்ளது.
- இதன் மேல் கோள வடிவ சிகரம் அமைந்துள்ளது.

- பிரதான விமானத்திற்கு எதிரே விமானம் ஒன்று உள்ளது. அதில் விஸ்ணு தெய்வத்தின் சிலை காணப்படுகிறது. சிறு சிகரத்தை கொண்ட கற்பக்கிரகத்தின் கீழ் பகுதியில் விமானம் உள்ளது.
- ஒரே அச்சில் வார்த்தெடுக்கப்பட்டவை போல் நந்தி உருவங்கள் பல கோவிலைச் சூழ சுவர்போல் அடுக்கடுக்காக வைக்கப்பட்டுள்ளன.

(iii) உள்ளடக்கம்

- கல்யாண சுந்தரமூர்த்தி" எனும் இச்சிற்பம் சிவன், பார்வதி திருமணத்தைக் காட்டுகின்றது.
- சிவபெருமான் பார்வதியின் ஒரு கையைப் பிடித்துள்ளார். பார்வதி அண்ணளவாகச் சிவபெருமானின் இடது புறத்தே நிற்கும் விஷ்ணுவுக்கு சமமாக உள்ளார். விஷ்ணுவினது இராணியாகிய இலட்சுமி, பார்வதியின் வலது புறத்தே நிற்கிறார்.

CamScanner

ஊடகம்

- இந்த நான்கு உருவங்களும் வெண்கலத்தால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

மாதிரி

- இயற்கைவாத பண்புகளுடன் மோடிப்படுத்தப்பட்ட கலைப்பாணியில் வடிவமைக்கப்பட்டுள்ளன.
- ஒரு தனி அலகாகக் காணப்படுகின்றமையால், ஒரே காலப்பகுதியில் ஒரே தொழிற்கூடத்தில் யாதேனும் திட்டவட்டமான பாணியுடன் தொடர்புபட்டதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்பது உறுதியாகின்றது. சோழர் மரபில் சிவபெருமானுக்கு முதன்மைத்துவம் வழங்கப்பட்டுள்ளது எனவும் நம்ப முடிகின்றது. இச்சிலைகளின் முகங்களின் அலங்கரிப்பம்சங்கள் சமகால சோழக் கற்செதுக்கல் வேலைப்பாடுகளுடன் நெருக்கமான தொடர்பையும் சமாந்தரத் தன்மையையும் கொண்டிருந்ததாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

கலைத்துவப் பெறுமதி

- இச்சிலை அடுக்கமைப்பாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இங்கு காணப்படும் பெரிய உருவம் மூலம் சிவன் காட்டப்பட்டுள்ளார். பருமனைப் பொறுத்தமட்டில் விஷ்ணுவை விட இலட்சுமி சிறிய அளவாகக் காட்டப்பட்டுள்ளது. பார்வதியின் பருமன் சிவனிலும் சிறியதாகக் காட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் தெய்வங்களையும் தேவதைகளையும் காட்டுவதற்கு நியமமான ஒரு முறை இருந்தமை உறுதியாகின்றது. அதாவது ஆண் தெய்வங்கள், பெண் தேவதைகளின் அளவுப் பிரமாணத்தைவிட பெரிதாக அமைக்கப்பட்டுள்ளன.

பகுதி - இ

(சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)

19ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் வசித்த கலைஞர்கள் செய்த புதிய முயற்சிகள் ஓவியக் கலையில் பல்வேறு உபவாதங்கள் தோன்றுவதற்கு காரணமாயின.

(i) பிரான்சில் சலோனுக்கு எதிராக செயற்பட்ட கலைஞர்கள் **இருவரைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) மனப்பதிவுவாதக் கலை இயக்கத்திற்கு சமகாலத்தில் நிர்மாணிப்பில் ஈடுபட்ட ஒகுஸ்ட் ரொடேங் கலைஞனின் 'காடு' (calais) எனும் கூட்டுச் சிலை பற்றி சிறு அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

(iii) பிற்பட்ட மனப்பதிவுவாத கலைஞரான போல் சேசானின் 'வெடிப்புகள் ஏற்பட்ட சுவர்களுடன் கூடிய வீடு' (The house with the cracked walls) மற்றும் கனவடிவவாத ஓவிய கலைஞர் ஜோசப் புரோக்கின் 'வீடு மற்றும் மரங்கள்' (House and Trees) எனும் இரு ஓவியங்கள் பற்றி ஒழுங்கமைப்பு, மாதிரி, வர்ணப் பயன்பாடு, பூரணத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒப்பீட்டுரீதியாக விவரிக்குக. (08 புள்ளிகள்)

(i) 1) குளொட் மொனே
2) எட்வாட் மனே
3) எட்கா டெகாஸ்
4) மேரி கசற்
5) பியறே ஒகஸ்ட் ரெனோர்
6) அல்பிரட்சிசிலி
7) கமலிபிசாரோ

(ii)- கலேஸ் நகரத்தை விடுவிப்பதற்காக உயிர் தியாகம் செய்ய முன் வந்த தேசப்பற்றுள்ள ஆறு பேர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.
- எட்வேட் மன்னன் கலேஸ் நகரத்தை கைப்பற்றியபோது நகர மக்கள் அழிவதை தடுப்பதற்காக இவ் ஆறு பேரும் முன்வந்ததை உணர்த்தியுள்ளது.
- இறப்பதற்குத் தயாராக உள்ளவர்களின் கழுத்தில் கயிற்றைக் கட்டியும் பாதணிகள் , தலைக்கவசம் எதுவும் இன்றியும் காட்டப்பட்டுள்ளது.
- அமைதியான முறையில் சிந்தனை, விதி, கலகம், வீரமரணம் போன்ற உணர்வுகள் வெளிப்படுத்துவதாக உள்ளது.
- சிற்பத்தில் ஒட்டு மொத்த அசைவை கருதும் போது மெல்ல மெல்ல முன்னோக்கி செல்லும் சுபாவத்தை வெளிப்படுத்துகிறது.
- உயிர் நிலைப்பருமனுடன் வடிவமைக்கப்பட்ட இச் சிற்பம் மனப்பதிவு வாதப் பண்புகளை கொண்டது.

(iii) **வெடித்த சுவர்களுடனான வீடு**

- மலைச்சாரலில் அமைந்த தனித்த பாழடைந்த வீட்டை மையப்பொருளாகக் கொண்டு வரையப்பட்ட ஓவியமாகும். கவனமாகவும் குறிப்பிட்ட நோக்கை இலக்காகவும் கொண்டு தூரிகைப் பூச்சுகளால் இவ்வோவியம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- வீட்டின் பக்கத் தோற்றமே காணப்படுகின்றது. அதன் சுவர் பாரியளவில் வெடித்துக் காணப்படுகிறது.
- குளிர் வர்ணங்களும் வெப்ப வர்ணங்களும் ஒன்றுடன் ஒன்று ஒத்திசையும் விதம் இதிலும் காணப்படுகின்றது.
- கூரையின் செந்நிற விளிம்பு கண்ணைக் கவரும் விதத்தில் உள்ளது.
- முப்பரிமாண பண்பு இன்றி இருபரிமாணத்தில் இவ்வோவியம் வரையப்பட்டுள்ளது.
- உருவங்களின் கட்டமைப்பு, வர்ணம் என்பவற்றில் விசேட கவனம் செலுத்தப்பட்டு வரையப்பட்டுள்ளது.

CamScanner

வீடுகளும் மரங்களும்

- இவ்வோவியத்தில் மரங்களின் ஊடாகக் காணப்படும் பல வீடுகள் தெரிகின்றன.
- இது எண்ணெய் வர்ணங்களால் கன்வசு மீது வரையப்பட்டுள்ளது.
- எளிமையான கேத்திர கணித வடிவங்களைக் கொண்டு வீடுகளும் மரங்களும் வரையப்பட்டுள்ளன.
- வீடுகளின் கூரைகளும் சுவர்களும் கனவடிவத்தில் வரையறுக்கப்பட்ட இளங்கபில வர்ணத் தொகுதியைக் கொண்டுள்ளன.
- கோணம், சாய்வு என்பன மீது கவனஞ் செலுத்தப்பட்டு இயற்கையில் கண்ணுக்குப் புலப்படும் காட்சியில் இருந்து விலகிய நிலை காணப்படுகிறது,
- கனவடிவவாத ஓவியக் கலை நுட்பங்களினால் அக்கடமிக் கலையின் கட்புல நோக்கங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.
- தூரநோக்கு இயல்புகள், முப்பரிமாணத் தன்மை எனும் பண்புகள் உபயோகிக்கப்படவில்லை.
- வடிவங்களை எளிமையாக்கல், தூரதரிசனம் என்பன இந்த ஓவியத்தின் முதன்மையான கலைப்பண்புகளுள் சிறப்பானவையாகும்.

7. உரோமாபுரி கட்டிடக் கலை மற்றும் சிற்பக் கலைகளில் மிகவும் முன்னேற்றமடைந்த அரசாகும்.

(i) வெற்றி வளைவுகள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) 'கெரகெல்லா (cracalla) மார்பளவு சிலை' பற்றி சிறு அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

(iii) உரோம கட்டிடக் கலையில் அனைத்து யுகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நிர்மாணிக்கப்பட்ட குளோசியம், மாபெரும் நாடக அரங்காகும். மாதிரி, கட்டிடக்கலைப் பண்புகளின் பயன்பாடு, நவீன நிலைகள் என்பவற்றை உள்ளடக்கி ஆராய்க. (08 புள்ளிகள்)

(i)
1. டைட்டஸ் வெற்றிவளைவு
2. கொன்ஸ்ரன்ரையின் வெற்றி வளைவு
3. றஜன் வெற்றி வளைவு

(ii)- இது உரோமோனிய மார்பளவுத் தலைச்சிற்பங்களில் ஒன்றாகும்.
- இது சலவைக் கல்லினால் அமைக்கப்பட்டது.
- கெரகெல்லா சக்கரவர்த்தியின் பார்வை கூர்மையாக எதையோ நோக்கிய வண்ணம் காட்டப்பட்டுள்ளது.
- மிக நெருங்கிய சுருள்வடிவ கேசமும், தாடியும், கூரான மூக்கும், இமைப்புருவங்களுக்கு இடையிலான மடிப்புக்கள் இறுக மூடிய உதடுகள் என்பன அவற்றின் தனிநபர்ப் பண்பாக காணப்படுகின்றது.
- மிகக் கொடிய நிர்வாகியாக கருதப்படும் சக்கரவர்த்தியின் கொடூரமான மனநிலை தன்மையை புலப்படுத்துவதாக இத்தலைச் சிற்பம் காணப்படுகின்றன.
- சக்கரவர்த்தியின் ஆளுமை, வயது, கம்பீரத்தன்மை, வீரம், தனிநபர் குணப் பண்புகள் வெளிப்படும் வகையில் மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன.
- கட்டையாக வெட்டப்பட்ட சுருட்டை முடி இந்தச் சிற்பத்துக்கு அழகூட்டுவதாக அமைந்துள்ளது. முகம் முழுவதிலும் வளர்ந்துள்ள தாடியும் மீசையும் அவனது கொடூரத் தன்மையை வெளிக்காட்டி நிற்கின்றன. புருவங்களைச் சுருக்கி கண்ணின் கீழ்ப்பகுதியின் ஊடாகப் பார்க்கும் கூர்மையான பார்வையையும், சிந்தனை வயப்பட்ட தன்மையையும் சிற்பி மிகச் சிறப்பாக வெளிக்காட்டியுள்ளார். யாதேனுமொன்றின்பால் ஐயத்துடன் பார்த்துக் கொண்டிருக்கும் உடல்நிலை கரக்கலா சிற்பத்தின் மூலம் காட்டப்பட்டுள்ளது. உரோம வம்சத்தினர் அணிகின்ற மேலங்கி போன்ற ஆடை சிற்பத்தில் காட்டப்பட்டுள்ளது.
- புத்திசாலியான ஒரு மனிதனாகவும், தைரியசாலியான மனிதனாகவும் எடுத்துக் காட்டுவது சிறப்பானது.
- சக்கரவர்த்தியை பேரரசனின் கொடுமையான அமைதி பெறாத தன்மையை முகத்தில் மிக நுணுக்கமாக வெளிப்படுத்திக் காட்டுவதில் கலைஞர் வெற்றி பெற்றுள்ளார்.

(iii) - கொலேசியம் மிகப்பிரமாண்டமான உரோமர்களின் பெயர் சொல்லும் கட்டட அமைப்பாகும்.
- இது 'பிளேவியன் அம்பிதியெட்டர்' என குறிப்பிடப்படும்.
- இது நீள்வட்டவடிவ நில அமைப்புடைய பாரிய அரங்க மேடையாகும். அத்துடன் யுத்தக்காட்சிகளைப் பார்வையிடவும் வசதி கொண்டதாக இருந்தது.
- இது உரோமர்களின் பலத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ள முக்கியமான கட்டிடம் ஒன்றாகும்.
- இங்கு ஏறத்தாள 50,000 - 80,000 பார்வையாளர்கள் அமரக்கூடிய இட வசதியைக் கொண்டது.
- சாந்தினால் நிர்மாணிக்கப்பட்ட இதில் வில்வளைவான வாயில்களைக் கொண்ட மூன்று மாடிகள் உள்ளன.
- கி.பி. 80 அளவில் கிரேக்க நாடக அரங்கைத் தழுவி, அதிலும் பெரிய அளவுடையதாக இக்கட்டடம் கட்டப்பட்டுள்ளது.
- இக்கட்டடத்தின் உயரம் 161 அடி ஆகும்.
- மூன்று மாடிகளைக் கொண்ட இக்கட்டடத்தில் வில்வளைவுகள் மற்றும் கலை நிர்மாணிப்புக்களில் பயன்படுத்தப்பட்ட மூன்று தூண் வகைகளும் ஒழுங்கு முறைப்படி இடம்பெற்றுள்ளன. கீழ் மாடி டொரிக் தூண் மோடியிலும், இரண்டாம் மாடி அயோனிக்குத் தூண் மோடியிலும், மூன்றாம் மாடி கொரிந்தியன் தூண் மோடியிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- இத்தூண்கள் தனியே தூண்களாக இல்லாமல் ஆர்ச்(ARCH) வளைவுகளை இணைத்து உருவாக்கப்பட்டுள்ளது.
- இதில் உரோமர்களின் பொறியியல் திறனை அறியக்கூடியதாக உள்ளது.
- கொலோசியத்தின் உள்ளே சுரங்கப்பாதைகள், ஆசனங்கள் அலங்கார அறைகள் என்பன அடங்கி உள்ளன. இதன் வெளியில் இருந்து கட்டடத்தின் உள்ளே வருவதற்கும், நுழைவதற்கும் உரிய வழியும், வட்டமாக சுற்றிவர வீரர்கள் தங்குவதற்கும் உடைகள் மாற்றவும், மிருகங்கள் அடைக்கவும் அறைகளும் அமைந்துள்ளன.

CamScanner